**முதன்மை சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்**

**M.C.O.P.No.122/2022**

| | | |
|---|---|---|
| மனுதாரர் தரப்பு சாட்சி | .. | 1 |
| பெயர் | .. | சிவசங்கர் |
| தகப்பனார் / கணவர் | .. | பெருமாள் |
| வயது | .. | 35 |
| தொழில் | .. | Lab Assistant |
| கிராமம் | .. | ராந்தம் |
| தாலுக்கா | .. | வெம்பாக்கம் |

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10ஆம் நாள் செவ்வாய்கிழமை திரு.நா.சுரேஷ், எம்.எல்., முதன்மை சார்பு நீதிபதி, செய்யாறு அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

**1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவம் எப்போது நடைபெற்றது என்றால் என்னுடைய நண்பர் நிச்சயசார்த்தத்திற்கு சென்றுவிட்டு வரும்போது நடைபெற்றது. சம்பவ இடத்தில் மின் விளக்கு எதுவும் இல்லை என்றால் சரிதான். நான் ராந்தத்தில் இருந்து வெம்பாக்கம் நோக்கியும், அவர்கள் வெம்பாக்கத்தில் இருந்து ராந்தம் நோக்கியும் வரும் போது விபத்து ஏற்பட்டது. நாங்கள் அதிவேகமாக வருவதை பார்த்து 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தை மண் ரோட்டில் நிறுத்திவிட்டார் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் மீது எந்த தவறு இல்லை என்றும், விபத்தை நாங்கள் தான் ஏற்படுத்திக் கொண்டோம் என்பதால் 1ம் எதிர்மனுதாரர் எந்த இழப்பீடு கொடுக்க கடமைபட்டவர் இல்லை என்றாலும் சரியல்ல. அவ்வாறு இழப்பீடு கொடுக்க வேண்டும் என்றால் 1ம் எதிர்மனுதாரர் 2ம் எதிர்மனுதாரரிடம் காப்பீடு செய்து இருப்பதால் 2ம் எதிர்மனுதாரர் தான் எனக்கு இழப்பீடு கொடுக்க கடமைபட்டவர் என்றால் தெரியாது. மேற்படி விபத்தில் 1ம் எதிர்மனுதாரருக்கு தான் காயம் அதிகம் என்றும், என்னுடைய செல்வாக்கை பயன்படுத்தி 1ம்

எதிர்மனுதாரருக்கு எதிராக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதனால் இந்த வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

புகார் யார் கொடுத்தது என்றால் பிரபு என்பவர் கொடுத்தார். விபத்தை ஏற்படுத்திய வாகனத்தின் ஓட்டுநர் மது அருந்திவிட்டு விபத்து ஏற்படுத்தியதாக முதல் தகவல் அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் மது அருந்தி வாகனத்தை ஓட்டியதால் 2ம் எதிர்மனுதாரர் எந்த வித இழப்பீடு கொடுக்க கடமைபட்டவர் இல்லை என்றால் சரியல்ல. விபத்தை ஏற்படுத்தியவர் மது அருந்தாமல் வந்து இருந்தால் விபத்து ஏற்பட்டிருக்காது என்றால் சரியல்ல. விபத்து 29.04.2021 அன்று நடைபெற்றது. மோட்டார் வாகன ஆய்வுக்கு விபத்துக்குள்ளான வாகனத்தை 04.07.2022 அன்று காலதாமதமாக தான் ஆய்வுக்கு அனுப்பப்பட்டது என்றால் அது பற்றி தெரியாது. மோட்டார் வாகன ஆய்வறிக்கையின் 7ம் பக்கத்தில் விபத்தை ஏற்படுத்திய வாகனத்தின் ஓட்டுநர் உரிமம் பெறப்படவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லாததும் காப்பீடு விதி மீறல் என்றால் தெரியாது. நான் எஸ்.ஆர்.ஐ பாலிடெக்னிக் கல்லூரியில் Lab Assistant ஆக பணிபுரிகிறேன். என்னுடைய மாதம் சம்பளம் ரூ.12,000/- என்பதற்கான சம்பள சான்று எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், கையில் தான் வாங்கினேன். நான் தாக்கல் செய்துள்ள மருத்துவபில்களில் எதிலும் நிறுவனத்தின் கையொப்பம் இல்லை என்றால் சரிதான், மேல்ஒப்பம் உள்ளது. என்னுடைய சம்பளத்திற்கான ஆவணம் தாக்கல் செய்யாததால் ஊதிய இழப்பு கோரமுடியாது என்றால் சரியல்ல. போக்குவரத்திற்கான ரசீது தாக்கல் செய்தேனா என்றால் செய்யவில்லை. நான் மருத்துவ செலவிற்காக ரூ.4,00,000/- செலவு செய்ததற்கு பில்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ஊனத்தன்மைக்கான சான்று தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நிரந்தர ஊனத்துக்காக நான் கோரியுள்ள இழப்பீடு அதிகம் என்றால் சரியல்ல, என்னால் நடக்க முடியவில்லை. நான் கோரியுள்ள இழப்பீடு தொகை

ரூ.13,50,000/- அதிகம் என்றால் சரியல்ல. எனக்கு வலது காலில் ராடு வைக்கப்பட்டுள்ளது. நான் தலைகவசம் அணிந்திருந்தால் தாடையில் காயம் ஏற்பட்டிருக்காது என்றால் சரியல்ல. எலும்பு முறிவுக்கான எஸ்ரே நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீடு அதிகம் என்பதால் மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

Taken down before by me in open Court read over / interpreted to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- N.Suresh
**Principal Subordinate Judge,**
**Cheyyar.**